1971 டிசம்பர் 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டுக்குக் குடிபெயரும் தமிழ் மக்களுக்காக கடனுகப் பணம் தந்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. பல இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு நிலம்

* 107 வினு—**டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம் துரிஞ்சிப்பட்டியில் உள்ள சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் வளர்ச்சிக்காக மானியமாக நிலம் வழங்கக் கோரி அரசுக்கு மனு ஏதேனும் சமீபத்தில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Committee on Sales Tax.

* 108 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Varthaga Munnetra Kazagam under the Chairmanship of Thiru A. C. Narasimhan, Hon. Member of this House, has requested the Government to appoint an enquiry panel for the sales tax enforcement about the 3rd August 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் விற்பனை வரிச் சட்டத்தை எளிதாக்கி வர்த்தகர்களுக்கு ஏற்படும் தொல்லைகளை அதனுல் தவிர்க்க, "விற்பனை வரி விசாரணை ஆணைக் குழு" ஒன்றை நியமிக்குமாறு சென்னை, தமிழ்நாடு வர்த்தகர் முன்னேற்றக் கழகம் அரசைக் கேட்டுள்ளது.

(உ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : விற்பனை வரி செலுத்தாமல் தப்பித்துக் கொள்வதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விற்பனை வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்களைத் தடுக்க அரசாங்கம் பல வழிகளைக் கைக் கொண்டிருக்கிறது. சோதனைச் சாவடிகள் அதிகமாக்கப்பட்டிருக்